off stage

# சிங்கப்பூரில் விலங்குகள்

சிங்கப்பூரின் வரலாறு, நாட்டுப்புறக் கதைகள் மற்றும் புராணங்களுடன் தொடர்புடைய பல விலங்குகள் உள்ளன. கீழே அவற்றைப் பற்றி மேலும் அறிந்து வண்ணம் தீட்டவும்!

சிங்கப்பூரின் வனவிலங்குகளைப் பற்றி மேலும் அறிக



## சிங்கம்

சிங்கப்பூர் இந்த விலங்கின் பெயரால் அழைக்கப்படலாம், இருப்பினும், சிங்கத்திற்கு இது பூர்வீகம் கிடையாது. சிங்கங்கள் பல கண்டங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான காட்டு சிங்கங்கள் இப்போது ஆப்பிரிக்காவிலும் சிறிய எண்ணிக்கையில் இந்தியாவிலும் இருக்கின்றன.

**வேடிக்கையான உண்மை**

1900 களின் முற்பகுதியில் சிங்கப்பூரின், உள்ளூர் மற்றும் பயண சர்க்கஸ்கள் தங்கள் நிகழ்ச்சிகளில் சிங்கங்களைச் சேர்த்துக் கொண்டன.



## ஆமை

ஆமைகள் கடலில் வாழ்கின்றன மேலும் மணல் நிறைந்த கடற்கரைகளில் முட்டையிடுவதற்காக மட்டுமே நிலத்திற்குத் திரும்புகின்றன. சிங்கப்பூரில் ஆமைகள் பொதுவாக, தெற்கு தீவுகளான குசு தீவு மற்றும் சிஸ்டர்ஸ் தீவுக்கு (Sisters' Island) அருகில் காணப்படுகின்றன.

சிங்கப்பூரில் ஆமை பாதுகாப்பு பற்றி அறியவும்



## வாள் மீன்

சிங்கப்பூரின் மிகவும் பிரபலமான கதைகளில் ஒன்றான ஹாங் நாடிம் மற்றும் புக்கிட் மேரா (ரெட்ஹில்) புராணத்தில் வாள்மீன் தோன்றுகிறது. இருப்பினும், நம் நீர்நிலைகளில் உண்மையான வாள்மீன் இல்லை, அதே போல் தோற்றமளிக்கும் முரல் மீன் (garfish, மலாய் மொழியில் ' தோடாக்' என்று அழைக்கப்படுகிறது) மட்டும்தான் உள்ளது.



## முதலை

உப்பு நீர் முதலைகள் சிங்கப்பூரை பூர்வீகமாகக் கொண்டவை. ஜுரோங் தீவுக்கு அருகில் 'புலாவ் புவாயா' (முதலைத்தீவின் மலாய் மொழி பதம்) என்று இந்த விலங்கின் பெயரால் ஒரு தீவு உள்ளது. இந்த பகுதி ஒரு காலத்தில் சதுப்புநிலங்களால் நிரம்பி, உப்பு நீர் முதலைகளின் இயற்கை வாழ்விடமாக இருந்தது.

**வேடிக்கையான உண்மை**

இந்த விலங்கு 5 மீட்டருக்கும் மேல் நீளமாக வளரக்கூடியது!

1 எஸ்பிளனேட் டிரைவ், சிங்கப்பூர் 038981 | வாடிக்கையாளர் அனுபவ ஹாட்லைன்: 6828 8377

இந்தப் பொருளின் எந்தப் பகுதியும் எஸ்பிளனேட் கோ லிட். (Esplanade Co Ltd.)-இன் அனுமதியின்றி வேறு எந்த வடிவத்திலும் மீளுருவாக்கம் செய்யப்படக்கூடாது.

esplanade
theatres on the bay
singapore

எஸ்பிளனேட் என்பது ஒரு இலாப நோக்கற்ற தொண்டு நிறுவனமாகும். பின்தங்கியவர்கள் உட்பட பல்வேறு சமூகங்களுக்கு கலையின் மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் கொண்டு வர எங்களுக்கு உதவுங்கள்.

www.esplanade.com | EsplanadeSG | EsplanadeSingapore #esplanade #mydurian